**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 159/2024

**ம.சா.3 மருத்துவர் விக்னேஷ் சங்கர்**

| | |
|---|---|
| Name | : **மருத்துவர் விக்னேஷ் சங்கர்** |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 15.07.2026 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 9.4.2024 ம் தேதி காயம்பட்ட இறந்து போன கணேசன் என்பவருக்கு நான் சிகிச்சையளிக்க வில்லை. நான் மேற்படி கணேசன் என்பவரை 10.4.2024 ம் தேதி பார்த்தேன். விபத்தினால் கணேசன் என்பவருக்கு இடதுபக்க நெற்றியில் 4 x 3 அளவில் கீறலும், மூக்கிலும் , வலதுபக்க முகத்திலும் சிராய்ப்பு காயங்கள் இருந்தன. அவர் சிகிச்சைக்கு சேர்ந்த போது மதுவின் ஆளுகைக்குட்பட்டு இருந்தார் என விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. கணேசனுக்கு அரசு மருத்துவமனையில் 9.4.2024 முதல் 19.4.2024 ம் தேதி வரை தொடர் சிகிச்சை பெற்றுள்ளார். சாட்சி வசம் காட்டப்படும் 9.4.2024 முதல் 19.4.2024 ம் தேதி வரையிலான கணேசன் என்பவரின் டிஸ்சார்ஜ் சம்மரி என சாட்சி ஒப்புக்கொள்வதால் அந்த டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ம.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கணேசன் வாகன விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறக்கவில்லை. கணேசன் என்பவர் சிகிச்சையில் இருந்து விடுவிக்கும் போது

நல்ல நிலையில் தான் இருந்தார்.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

காயம்பட்ட கணேசனுக்கு வயது 60 க்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். கணேசனுக்கு நான் விபத்து பதிவேடு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எங்களது மருத்துவமனையில் இருக்கும்வரை கணேசன் உயிரோடு தான் இருந்தார் என்றால் சரிதான். கணேசன் மருத்துவமனையில் இறக்கவில்லை என்பதால் அவரை பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றால் சரிதான்.

(ஒம்)K.சுதா ராணி
கூடுதல் சார்பு நீதிபதி
தென்காசி.